3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) சட்டமன்ற பத்திரிகையாளர்களுக்கு பேனா, குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு 2–லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(உ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருக்கோயில்களில் தினந்தோறும், நாள் முழுவதும் அன்னதானம் அளிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார். தமிழகத்தில் இருக்கின்ற 754 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்தத் திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கையும், ஆகம விதிகளின்படி அந்தத் திருக்கோயில்களின் நடை திறக்கப்படும் நேரமும் கணக்கிடப்பட்டு, வரும் பக்தர்கள் அனைவருக்கும் வாழை இலை போட்டு, வடை பாயாசத்துடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த 754 திருக்கோயில்களில்,*